Makkal Kural



# சாய்ராம் மேலாண்மை கல்வி பேராசிரியர் மாறனுக்கு விருது

சென்னை, செப். 11–

சென்னையை அடுத்த மேற்கு தாம்பரம் ஸ்ரீ சாய்ராம் மேலாண்மை கல்வி பேராசிரியர் மாறனுக்கு இந்திய மேலாண்மை பள்ளி கல்வி நிறுவனங்களின் கூட்டமைப்பு சார்பாக இந்த ஆண்டிற்கான சிறந்த மேலாண்மை ஆசிரியர் தேசிய அளவிலான விருது வழங்கப்பட்டது. 25வது மேலாண்மை கல்வி கருத்தரங்கில் ஜார்க்கண்ட் மாநில ராஞ்சி பல்கலைக்கழகத்தில் ஜார்க்கண்ட் மாநில காதி மற்றும் கிராமோதய தலைவர் சஞ்சய்செத் விருது வழங்கி கவுரவித்தார்.

இவ்விருதிற்கு அகில இந்திய அளவில் மேலாண்மை கல்வி பேராசிரியர்களிடையே அதிக போட்டிகளிடையே இந்த சிறந்த ஆசிரியர் விருது வழங்கப்பட்டது. இவர் கடந்த 25 வருடங்களாக ஆசிரியர், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் நிறுவன ஆலோசகராக பணியாற்றியதற்கும் மேலும் சுமார் 200 ஆராய்ச்சி கட்டுரைகளை தேசிய மற்றும் பன்னாட்டு இதழ்களில் வெளியிட்டுள்ளார்.

மேலும் 220க்கு மேற்பட்ட தேசிய மற்றும் பன்னாட்டு கருத்தரங்கில் சிறப்பு பேச்சாளராகவும் கட்டுரை, ஆய்வு கட்டுரை சமர்பித்தல் மற்றும் பல ஆராய்ச்சி கலந்தாய்வில் பங்கேற்றது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மேலும் 25 மேலாண்மை ஆராய்ச்சி மாணவர்களை உருவாக்கி உள்ளார். இவர் 4 மேலாண்மை புத்தகத்திற்கு ஆசிரியராகவும் 20க்கும் மேற்பட்ட மேலாண்மை புத்தகத்திற்கு தொகுப்பு ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். இதற்கும் மேலாக கடந்த 10 வருடங்கள் +2 மாணவர்களுக்கு எந்த துறையை தங்களது உயர்கல்விக்காக தேர்ந்தெடுக்கும் ஆலோசனையை பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும் கருத்தரங்கிலும், 500க்கும் மேற்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சியின் மூலமாக பல லட்சம் பெற்றோர், மாணவர்களுக்கு எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி மாணவர் சமுதாயத்திற்கு செய்து கொண்டு இருக்கிற பணிக்காக இந்த ஆண்டின் சிறந்த பேராசிரியர் விருது மாறனுக்கு வழங்கி கவுரவிக்கப்பட்டது.

இவ்விழாவில் சுமார் 500க்கும் மேற்பட்ட மேலாண்மை பேராசிரியர்கள், மேலாண்மை கல்வி இயக்குநர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



ஸ்ரீ சாய்ராம் மேலாண்மை பேராசிரியர் மாறனுக்கு இந்திய மேலாண்மை கல்வி கூட்டமைப்பு சார்பாக ராஞ்சி பல்கலைகழகத்தில் நடந்த இந்த ஆண்டு சிறந்த ஆசிரியர் விருதை ஜார்கண்ட் மாநில காதி பிரமோதய தலைவர் சஞ்சய்செத் வழங்கினார். கூட்டமைப்பு தலைவர் மற்றும் முன்னாள் ராஞ்சி பல்கலைகழக துணை வேந்தர் எல்.என்.பகத் உடன் உள்ளனர்.